**செய்தி வெளியீடு எண்:74** **நாள்:29.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் வாழும் மாணவ, மாணவியர்கள் தொழிற்கல்வி பெறுவதற்கு வசதியாக மாவட்டங்கள் தோறும் தொழிற் பயிற்சி நிலையங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்பொழுது 62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற் பிரிவுகளிலும், தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தின் (NCVT) அங்கீகாரத்துடன் பயிற்சிகள் நடத்தப்பட்டு, தேசிய தொழிற் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறன் பெற்ற பணியாளர்கள் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகின்றனர்.

62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், 58 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பாலான தொழிற்பயிற்சி நிலையங்கள் 40 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டவை என்பதால், அவைகளை படிப்படியாக புனரமைக்கவும், புத்துயிருட்டவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையான அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி, தொழிற்பயிற்சி நிலைய கட்டடங்களின் வகுப்பறைகள், தொழிற் கூடங்கள், கழிப்பறைகள், மின்வயரிங், தரைப்பகுதி, கூரைப்பகுதி ஆகியவற்றை புதுப்பித்தல், தண்ணீர் வசதி, கழிப்பறை வசதிகள் மேம்படுத்துதல், நவீன மற்றும் புதிய கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதனை நடைமுறைப்படுத்தும் விதமாக, முதற்கட்டமாக 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டடப் பராமரிப்பு மற்றும் நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்க 10.90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் தொடர்ச்சியாக, புதுக்கோட்டை, விருதுநகர், கிண்டி, அம்பத்தூர் ஆகிய இடங்களிலுள்ள 4 தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டடப் பராமரிப்பிற்காக 2.05 கோடி ரூபாயும் மற்றும் செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்கி வழங்குவதற்காக 2.05 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 4 கோடியே 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளினால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படாவண்ணம் சீரிய முறையில் கண்காணிக்கவும், தொழிலாளர்களின் உயிரிழப்பினை தடுக்கும் நோக்கிலும், நடமாடும் கண்காணிப்பு குழு ஒன்றினை ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

விபத்தை தடுப்பதில் பயிற்சி முக்கிய பங்காற்றுகிறது. எனவே, பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு உரிய பயிற்சியினை சிறந்த முறையில் வழங்குவதற்காக சிவகாசியில் பயிற்சி மையம் ஒன்றை

துவக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஏற்படும் பேரபாய நிகழ்வுகளாலும் பாதுகாப்பற்ற முறையில் ரசாயனப் பொருட்கள் கையாளப்படுவதாலும், பணியாற்றும் மேற்பார்வையாளர், பணிப் பார்வையாளர் மற்றும் தொழிலாளர் ஆகியோருக்கு தொழில் வழி பாதுகாப்பு முறைகள் போன்ற பல பயிற்சிகள் வழங்கவும், சிறந்த வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தவும், தொழிற்சாலைகளில் நேரடி வகுப்புகள் மூலம் பயிற்சிகள் அளிக்கவும், விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் உள்ள காளீஸ்வரி அரசு கலைக் கல்லூரியில், தற்காலிகமாக இந்த பயிற்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி மையம் நிரந்தரமாக இயங்குவதற்காக, இம்மையத்திற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், இந்த மையத்தில் பணியாற்ற தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் 1, தொழிற்சாலைகள் ஆய்வாளர் 3, நூலகர் 1, கண்காணிப்பாளர் 1, உதவியாளர் 1, அலுவலக உதவியாளர் 1 என 8 பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இப்பணிகளுக்காக 2 கோடியே 36 லட்சத்து 76 ஆயிரத்து 338 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க வைத்தியம், சித்த வைத்தியம். சித்த மருத்துவ முறையில் மருத்துவ சிகிச்சை பெற விரும்பும் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் (ESI Hospitals) சித்த மருத்துவப் பிரிவு ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. இது போன்று அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் (ESI Dispensaries) இந்திய மருத்துவ முறையான ‘சித்த மருத்துவப் பிரிவு’ துவங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், 10 இடங்களிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளர்கள்.

இதன் தொடர்ச்சியாக சென்னை மண்டலத்திலுள்ள திருவல்லிக்கேணி, ஆவடி, கொரட்டூர், சேலம் மண்டலத்திலுள்ள ஆம்பூர், ராணிபேட்டை, மதுரை மண்டலத்திலுள்ள திண்டுக்கல், திருநகர், கோயம்புத்தூர் மண்டலத்திலுள்ள திருப்பூர்-1 உடுமலைப்பேட்டை, காட்டூர்-1 ஆகிய 10 இடங்களிலுள்ள அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த மருந்தகங்களில் தொடங்கப்பட உள்ள சித்த மருத்துவ பிரிவில் பணியாற்றுவதற்காக ஒரு மருந்தகத்திற்கு ஒரு உதவி மருத்துவ அலுவலர் பதவி மற்றும் மருந்தாளுநர் பதவி என மொத்தம் 10 சித்த உதவி மருத்துவ அலுவலர் பதவி மற்றும் 10 மருந்தாளுநர் பதவி என 20 பதவிகள் தோற்றுவிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கென 1 கோடியே 36 லட்சத்து 29 ஆயிரத்து 360 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதேபோன்று, சிவகாசி, திருச்சி, சேலம், வேலூர் மற்றும் ஓசூர் ஆகிய 5 இடங்களிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேதப் பிரிவு தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த மருத்துவமனைகளில் துவங்கப்பட உள்ள ஆயுர்வேதப் பிரிவில் பணியாற்றுவற்காக ஒரு மருத்துவ மனைக்கு 1 உதவி மருத்துவ அலுவலர் மற்றும் 1 மருந்தாளுநர் பணியிடம் என 5 உதவி மருத்துவ அலுவலர் மற்றும் 5 மருந்தாளுநர் என 10 பதவிகளை உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 67 லட்சத்து 56 ஆயிரத்து 360 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஹோமியோபதி பிரிவு தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த மருத்துவமனைகளில் துவங்கப்பட உள்ள ஹோமியோபதி பிரிவில் பணியாற்றுவதற்காக ஒவ்வொரு மருத்துவமனைக்கும், 1 உதவி மருத்துவ அலுவலர் மற்றும் 1 மருந்தாளுநர் பதவி என 2 உதவி மருத்துவ அலுவலர் மற்றும் 2 மருந்தாளுநர் பதவிகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 25 லட்சத்து 56 ஆயிரத்து 600 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில், யுனானி மருத்துவ பிரிவு தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். புதியதாக துவங்கப்பட உள்ள யுனானி மருத்துவப் பிரிவில் பணியாற்றுவதற்காக ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 1 உதவி மருத்துவ அலுவலர், 1 மருந்தாளுநர் என மொத்தம் 2 மருத்துவ அலுவலர் மற்றும் 2 மருந்தாளுநர் பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 25 லட்சத்து 56 ஆயிரத்து 600 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 29.1.2013.